


# அத்தியாயம் IX

## நிலையான வளர்ச்சி இலக்கு-3



# அத்தியாயம் IX

## நிலையான வளர்ச்சி இலக்கு-3


**SDG-3ன் 13 இலக்குகளுள் மூன்று ஏற்கனவே அடையப்பட்டுவிட்டன. தொற்றாத நோய்கள், போதைப்பொருள் பயன்பாடு, மாசுபாடு மற்றும் நச்சுத்தன்மை ஆகியவற்றின் மீதான செயல்திறன் கவலைக்குரியதாக இருந்து வருகிறது. SDG-3ன் இலக்குகளில், ஒரு குறிப்பிட்ட இலக்கிற்கான செயல்திறன் குறிகாட்டிகள் அமைக்கப்படாததாலும், 2015-16ல் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப அடிப்படை கணக்கெடுப்பிற்குப் பிறகு 11 குறிகாட்டிகள் கண்காணிக்கப்படவில்லை என்பதாலும், 2017-18ஆம் ஆண்டிற்குப் பிறகு மூன்று குறிகாட்டிகள் கண்காணிக்கப்படவில்லை என்பதாலும் SDG-3ஐ அடைவதற்கான கண்காணிப் முழுமையற்றதானது.**

## 9.1 நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDG)

ஐக்கிய நாடுகள் சபையின் (United Nations-UN) 2030ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரல், 17 நிலையான வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals-SDGs) மற்றும் தொடர்புடைய 169 இலக்குகளைக் (targets) கொண்டுள்ளது. SDGகள் என்பது சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் பரிமாணங்களின் வளர்ச்சிகளை ஒருங்கிணைக்கும் உலகளாவிய இலக்குகளின் விரிவான பட்டியல் ஆகும்.

SDGகளை செயல்படுத்துவதில் இந்தியா உறுதியாக உள்ளது. இதற்கு, தேசிய அளவில், NITI ஆயோக் தலைமை வகிக்கிறது மற்றும் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (Ministry of Statistics and Programme Implementation - MoSPI) SDGகளின் இலக்குகளை கண்காணிப்பதற்காக ஒரு தேசிய குறிகாட்டி கட்டமைப்பை (National Indicator Framework - NIF) உருவாக்கியுள்ளது.

'நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு' எனப்படும் SDG-3, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலனில் கவனம் செலுத்துகிறது. SDG-3ன் கீழ் அடையப்பட வேண்டிய 13 இலக்குகள், **இணைப்பு 9.1ல்** கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், இந்த 13 இலக்குகளின் முன்னேற்றத்தை அளவிடவும் மற்றும் கண்காணிக்கவும், தேசிய அளவில் மொத்தம் 41 குறிகாட்டிகள் **(இணைப்பு 9.2)** அடையாளம் காணப்பட்டுள்ளன. உலக அளவிலும், தேசிய அளவில் MoSPIயாலும் மற்றும் தமிழ்நாட்டாலும் வடிவமைக்கப்பட்ட/ஏற்றுக்கொள்ளப்பட்ட குறிகாட்டிகளின் எண்ணிக்கை **விளக்கப்படம் 9.1ல்** கொடுக்கப்பட்டுள்ளன.




(ஆதாரம்: MoSPIன் SDG - தேசிய குறிகாட்டி கட்டமைப்பு பதிப்பு 3.0 (31-03-2021 நிலவரப்படி))

SDGகளுக்கான வரவு செலவு விவரங்கள் மற்றும் மாநிலத்தில் SDGயுடன் இணைக்கப்பட்ட துறைகள்/திட்டங்களின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் **அட்டவணை 9.1**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 9.1: SDG-3 உடன் இணைக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் அதற்கான வரவு–செலவுகள்**

| விவரங்கள் | 2018-21 காலகட்டத்திற்கு |
|---|---|
| இணைக்கப்பட்ட துறைகளின் எண்ணிக்கை | 26 |
| இணைக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை | 38 |
| வரவு–செலவு மதிப்பீடு | HFW துறைக்கான பட்ஜெட்டின் ஒரு பகுதியாக இருப்பதால், SDGக்கான தனி நிதி ஒதுக்கீடு இல்லை. |
| திருத்தப்பட்ட மதிப்பீடுகள் | |
| உள்ளபடியான செலவினம் | |
| செலவின வளர்ச்சியின் விழுக்காடு (ஆண்டு அடிப்படையில்) | |

(ஆதாரம்: TNSDG இணைய முகப்பு)

## 9.2 SDG -3 இலக்குகளை கண்காணிக்காமை

தமிழகத்தில், SDG-3 இலக்கை அடைவதற்கான கண்காணிப்பு, தலைமைச் செயலாளர் தலைமையிலான உயர் அதிகாரக் குழுவால் மேற்கொள்ளப்படுகிறது. திட்டமிடுதல் மற்றும் வளர்ச்சித் துறை (Planning and Development Department), கண்காணிப்பிற்கான மைய நிறுவனமாக (nodal agency) உள்ளது. மாநில அளவிலும், மாவட்ட மற்றும் வட்டார அளவிலும் SDG-3க்கான கண்காணிப்பு கட்டமைப்பை மாநிலம் இறுதி செய்துள்ளது. இதன் வளர்ச்சியைக் கண்காணிக்கும் நோக்கில், IT அடிப்படையிலான உத்தி ஒன்று குறிகாட்டிகளுக்கான தரவை உள்ளீடு செய்வதற்காக உருவாக்கப்பட்டது.

SDG-3ன் கீழுள்ள 13 இலக்குகளின் செயல்திறன், அவற்றிற்கான குறிகாட்டிகளைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றன மற்றும் கண்காணிக்கப்படுகின்றன. "நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு" என்ற SDG-3ன் கீழ் நிர்ணயிக்கப்பட்ட 13 இலக்குகளின் செயல்திறனை அளவிட NITI ஆயோக் 41 குறிகாட்டிகளை வடிவமைத்துள்ளது.

இருப்பினும், ஒரு இலக்கிற்கான செயல்திறன் குறிகாட்டிகள் அமைக்கப்படவில்லை என்பதும், 2015-16ல் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப அடிப்படை ஆய்வுக்குப் பிறகு 11 குறிகாட்டிகள் கண்காணிக்கப்படவில்லை என்பதும், 2017-18க்குப் பிறகு மூன்று குறிகாட்டிகள் கண்காணிக்கப்படவில்லை என்பதும் **அட்டவணை 9.2**ல் இருந்து தெரிய வருகிறது.

**அட்டவணை 9.2: SDG-3ன் இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளின் கண்காணிப்பு**

| இலக்கு | 3.1 | 3.2 | 3.3 | 3.4 | 3.5 | 3.6 | 3.7 | 3.8 | 3.9 | 3.a | 3.b | 3.c | 3.d | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மத்திய அரசால் வடிவமைக்கப்பட்ட குறிகாட்டிகளின் எண்ணிக்கை | 4 | 2 | 8 | 2 | 3 | 1 | 5 | 8 | 2 | 1 | 2 | 2 | 1 | **41** |
| 2015-16க்குப் பிறகு கண்காணிக்கப்படாத குறிகாட்டிகளின் எண்ணிக்கை | - | - | 1 | - | 3 | - | 1 | 1 | 2 | 1 | 1 | 1 | | **11** |
| 2017-18க்குப் பிறகு கண்காணிக்கப்படாத குறிகாட்டிகளின் எண்ணிக்கை | - | - | 1 | 2 | - | - | - | - | - | - | - | - | - | **3** |

(ஆதாரம்: திட்டமிடல் மற்றும் வளர்ச்சி துறையின் SDG இணைய முகப்பு)

அனைத்து குறிகாட்டிகளின் கீழும் செயல்திறன் கண்காணிக்கப்படவில்லை என்பதற்கான குறிப்பிட்ட காரணங்கள் தணிக்கைக்கு வழங்கப்படவில்லை.

இவ்வாறு, SDG-3 இலக்குகளுக்கான செயல்திறன் குறிகாட்டிகளைக் கண்காணிப்பதற்கான வழிமுறைகளை தமிழ்நாடு அரசு கொண்டிருக்கவில்லை.

## 9.3 SDG-3க்கான குறிகாட்டிகளின் செயல்திறன்

சில முக்கிய குறிகாட்டிகளின் இலக்குகள் மற்றும் அவற்றின் சாதனை குறித்து **அட்டவணை 9.3**ல் கொடுக்கப்பட்டுள்ளன மற்றும் SDG-3ன் கீழ் 13 இலக்குகளின் அடையப்பட்ட நிலைகள் **இணைப்பு 9.3ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 9.3: SDG-3ன் கீழ் சில முக்கிய குறிகாட்டிகளின் இலக்குகள் மற்றும் சாதனை**

| வகை | குறிகாட்டிகள் | இலக்கு | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| மகப்பேறு மற்றும் குழந்தை ஆரோக்கியம் | பேறுகால தாய்மார்களின் இறப்பு விகிதம் | 70 | 54 |
| | ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தை இறப்பு விகிதம் | 25 | 13 |
| | இளம் சிசு இறப்பு விகிதம் | 12 | 09 |
| தொற்றா நோய்கள் | குறைப்பிரசவ குழந்தை இறப்பை மூன்றில் ஒரு பங்காகக் குறைக்க | 1,40,000 | 98,859 |
| விபத்து/காயங்கள் | 2030க்குள் RTAஐ 50 விழுக்காடாகக் குறைக்க | 8,125 | 17,473 |

(ஆதாரம்: கொள்கைக் குறிப்பு 2023-24)

**தணிக்கை பின்வருவனவற்றைக் கண்டறிந்தது:**

- பதின்மூன்று இலக்குகளில், நான்கின் குறிகாட்டிகள்[136] கண்காணிக்கப்படவில்லை. எனவே, இந்த நான்கு இலக்குகள் தொடர்பாக மாநிலம் எந்த நிலையில் உள்ளது என்பது அரசுக்குத் தெரியவில்லை.
- ஒரு குறிப்பிட்ட இலக்கின் கீழ், அதன் சாதனையை அளவிட எந்த குறிகாட்டியும் இருக்கவில்லை (இலக்கு 13-சுகாதார இடர் மேலாண்மை).
- மொத்தம் 13 இலக்குகளில் மூன்று ஏற்கனவே அடையப்பட்டுள்ளன (பேறுகால தாய்மார்களின் இறப்பு, பச்சிளம் குழந்தை இறப்பு, இனப்பெருக்க ஆரோக்கியத்திற்கான வசதி).
- வேறு இரண்டு இலக்குகளைப் பொறுத்தமட்டில், மாநிலம் குறிப்பிடத்தக்க சாதனைகளை அடைந்துள்ளது (அனைவருக்கும் சுகாதார வசதி மற்றும் சாலை விபத்துகளால் ஏற்படும் இறப்பு).
- வேறு மூன்று இலக்குகளான, தொற்றாத நோய்கள், போதைப்பொருள் பயன்பாடு மற்றும் மாசுபாடு மற்றும் நச்சுத்தன்மை ஆகியவற்றில் முன்னேற்றத்திற்குப் பதிலாக குறைவு மட்டுமே இருந்தது கவலைக்குரிய ஒன்றாகும்.

---

136 மாசு, புகையிலை கட்டுப்பாடு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, மற்றும் ஆரோக்கியத்திற்கான நிதியளிப்பு.

அடையப்படவேண்டிய 13 இலக்குகள் தொடர்பான செயல்திறனைக் கண்காணிக்கத் தவறியதற்கு அரசு குறிப்பிட்ட பதில் எதுவும் அளிக்கவில்லை.

**பரிந்துரை: 14**

**SDG-3ன் கீழ், செயல்திறனைக் கண்காணிக்க, NITI ஆயோக் வடிவமைத்த அனைத்து குறிகாட்டிகளும் பயன்படுத்தப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.**

**(கு. ஜெய்சங்கர்)**

சென்னை<br>
நாள் 22 ஜூலை 2024

முதன்மை கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை-I),<br>
தமிழ்நாடு

மேற்கையொப்பமிடப்பட்டது

**(கிரீஷ் சந்திர முர்மூ)**

புது டில்லி<br>
நாள் 25 ஜூலை 2024

இந்திய தணிக்கைத் தலைவர்